பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 07 2025 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. திறன் இந்தியா இயக்கம் மூலம் திறமையான மற்றும் சுயசார்புடைய இளைஞர் சக்தியை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பள்ளிகளில் மாணவர்களை ‘ப’ வடிவில் அமர வைப்பது குறித்து மருத்துவர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

3. 7 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளின் ஆதார் பயோமெட்ரிக் பதிவுகளை புதுப்பிக்குமாறு பெற்றோரை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

4. ஏழைகளின் நலனுக்காக திமுக அரசு எந்த திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

5. சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா கோப்பை ஹாக்கிப் போட்டியில் ரயில்வே மற்றும் ஐ.ஓ.சி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

திறன் இந்தியா இயக்கம் மூலம் திறமையான மற்றும் சுயசார்புடைய இளைஞர் சக்தியை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கம் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, வெளியான சமூக வலைதளப் பதிவுகளை பகிர்ந்துள்ள பிரதமர், புதிய திறன் மற்றும் வாய்ப்புகளை உருவாக்கி எண்ணற்ற மக்களுக்கு இந்த இயக்கம் பயனளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க ஏதுவாக, வரும் காலத்திலும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்க அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பள்ளிகளில் மாணவர்களை 'ப' வடிவில் அமர வைப்பது குறித்து மருத்துவர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் சிரமத்திற்கு ஆளாகாத வகையில் அவர்களை அமர வைத்து கல்வி கற்பிக்க வேண்டும் என்றார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்திருப்பதாக கூறிய அவர், திமுக அரசு செயலற்ற அரசாக உள்ளது என்று குற்றம் சாட்டினார்.

கடந்த 4 ஆண்டுகளாக எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது திடீரென 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை தொடங்கியிருப்பது அரசின் நிர்வாக திறமையின்மையை வெளிப்படுத்துவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

7 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளின் ஆதார் பயோமெட்ரிக் பதிவுகளை புதுப்பிக்குமாறு பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட ஆதார் சேவை மையங்களில் இந்தப் பதிவுகளை இலவசமாக மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கைரேகை மற்றும் கருவிழி பதிவு செய்யப்படுவதில்லை என்பதால் அவர்களது புகைப்படம், பெயர், பிறந்த தேதி, முகவரி தொடர்பான ஆவணங்களை அளித்து ஆதாரில் பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி 5 வயது முதல் 7 வயது வரையிலான குழந்தைகளுக்கான கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தலுக்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.

ஆனால் 7 வயதைக் கடந்த குழந்தைகளுக்கு 100 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

சமோசா, ஜிலேபி, லட்டு போன்ற உணவுப் பொருள் பார்சல்களில் அவற்றின் சர்க்கரை அளவு மற்றும் கொழுப்பு குறித்த எச்சரிக்கை குறிப்புகளை ஒட்ட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதாக வெளியான செய்திகளை மத்திய சுகாதார அமைச்சகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில், இத்தகைய தகவல்கள் ஆதாரமற்றவை என்றும், மக்களை தவறாக வழிநடத்தக்கூடியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியிடங்களில் ஆரோக்கியமான உணவுப்பொருட்களை தேர்வை செய்ய ஏதுவாக சில ஆலோசனைகளை தனித்தனியாக வழங்கி இருப்பதாகவும், கேன்டீன்கள், கூட்ட அரங்குகள் போன்ற இடங்களில் இது தொடர்பான அறிவிப்பு பலகையை வைக்க அறிவுறுத்தி இருப்பதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவில் சாலையோர உணவுக் கலாச்சாரத்தை பாதிக்கும் வகையில், வியாபாரிகளால் விற்கப்படும் உணவுப் பொருட்களில் எச்சரிக்கை குறிப்பை ஒட்டும்படி எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் லட்சுமிபுரம் அணைக்கட்டு முதல் ஆண்டார்மடம் தடுப்பணை வரை ஆரணி ஆற்றின் கரைகளை பலப்படுத்தி, ஆற்றுப்படுகையை மறுசீரமைக்கும் பணியினை சிறுபான்மையினர் நல அமைச்சர் திரு. நாசர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இந்தத் திட்டத்திற்காக எட்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்படி ஆரணி ஆற்றின் கரைகள் பலப்படுத்தப்படுவதுடன், வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் கடப்பாக்கம், சிறுபழவேற்காடு, தத்தமஞ்சி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களையும், 22 ஆயிரத்திற்கும் அதிகமான ஹெக்டேர் பரப்பிலான விளை நிலங்களையும் வெள்ள பாதிப்பில் இருந்து பாதுகாக்க முடியும் என்றும் திரு. நாசர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஏழைகளின் நலனுக்காக திமுக அரசு எந்த திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னத்தில் ‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரச்சார கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், அஇஅதிமுக எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சினைகளை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நிவாரணம் பெற்றுத் தருவதாக தெரிவித்தார்.

நூறு நாள் வேலை திட்டத்திற்கு மத்திய அரசுடன் பேசி 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 99 கோடி ரூபாயை அஇஅதிமுக-தான் பெற்றுக்கொடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில்கொண்டு தற்போது மகளிர் உரிமைத் தொகைக்கான விதிமுறைகளை திமுக அரசு தளர்த்தியுள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

உலக இளையோர் திறன் தினத்தை முன்னிட்டு மத்திய அரசின் இளைஞர் நலன் மற்று விளையாட்டுத்துறை சார்பில் நாமக்கல்லில் மாணவர்களுக்கான திறன் பயிற்சி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்படடதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Kannan - 46 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் நடவடிக்கையை ரஷ்யா உரிய வகையில் எதிர்கொள்ளும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. செர்ஜி லாவ்ரோவ் கூறியுள்ளார்.

------------

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 90 பேர் உயிரிழந்தனர். 278 பேர் காயமடைந்தனர்.

------------

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் கூட்டாக மேற்கொண்ட சோதனையில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

------------

மும்பை சர்வதேச விமான நிலையத்தில் மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் மேற்கொண்ட சோதனையில் சுமார் 62 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் காட்டு யானைகள் நடமாடுவதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

------------

தூத்துக்குடியில் வரும் 19ஆம் தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

------------

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் தனியார் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் படித்த மாணவியர் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி காவல்நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

------------

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் கோவை கிளை சார்பில் பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

------------

திருச்சி பஞ்சபூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் இன்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளதால் வெளியூர் செல்ல அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்தவர்கள் பஞ்சப்பூர் பேருந்து நிலையத்திற்கு வருமாறு ஆட்சியர் திரு. சரவணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா கோப்பை ஹாக்கிப் போட்டியில் ரயில்வே அணி, தமிழக அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஐ.ஓ.சி. அணி – மலேசிய அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இன்றைய ஆட்டங்களில் மத்திய நேரடி வரிகள் வாரிய அணி – கடற்படை அணியையும், ராணுவ அணி – மஹாராஷ்டிராவையும், கர்நாடகா – மலேசியா ஜூனியர் அணியையும் எதிர்கொள்கின்றன.

---------------

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து, லக்ஷயா சென் மற்றும் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

------------

20 வயதுக்குட்பட்ட மகளிர் நட்பு ரீதியான கால்பந்துப் போட்டியின்

இரண்டாவது மற்றும் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று உஸ்பெகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி தாஷ்கண்டில் இரவு மணி 8.30க்கு தொடங்குகிறது.

------------

நெதர்லாந்தில் நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் இங்கிலாந்து அணி 3-2 என்ற கோல் கணக்கில் இந்தியா-ஏ அணியை வென்றது.

இந்திய அணி அடுத்தகட்டமாக பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து அணிகளை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**